குழுவிற்கு இரு உறுப்பினர்கள் தேர்ந்தெடுக்கப் படவேண்டும். கீழ்க்கண்ட நாட்களை நேரடி வாக்குப் பதிவு மூலம் தேர்தல் நடைபெறும் நாட்களென நிர்ணயிக்கிறேன்.

வேட்பு மனுக்கள் பெற்றுக் கொள்வதற்கான கடைசி நாளும் நேரமும்	11—9—1978 பிற்பகல் 5 மணி.
வேட்பு மனுக்கள் ஆய்வு செய்வதற்கான கடைசி நாளும் நேரமும்	11—9—1978 பிற்பகல் 6 மணி.
வேட்பு மனுக்கள் திரும்பப் பெறுவதற்கான கடைசி நாளும் நேரமும்	12—9—1978 பிற்பகல் 5 மணி.
தேவை ஏற்படின் வாக்குப்பதிவு நடைபெறும் நாளும் நேரமும்	14—8—1978 4 மணி முதல் 6 மணி வரை.

வேட்புத் தாளை செயலாளரிடமிருந்து பெற்றுக் கொள்ளலாம்.

4. கவன ஈர்ப்பு.

(1) விழுப்புரத்தில் நடந்த வகுப்புக் கலவரத்தில் அரசு கொடுத்த நஷ்ட ஈடு எல்லா சமூகத்தினருக்கும் கொடுக்கப்படவில்லை என்பது குறித்து.

மாண்புமிகு மேலவைத் தலைவர் : திரு. கே. எஸ். அப்துல் வகாப் ஒரு கவன ஈர்ப்புத் தீர்மானம் கொடுத்துள்ளார். மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய விளக்கத்திற்குப் பின், தேவைப்பட்டால், உறுப்பினர் கேள்விகள் கேட்டு, மேலும் விளக்கம் பெறலாம்.

THIRU K. S. ABDUL WAHAB : Under rule 42 of the Legislative Council Rules I wish to call the attention of the Hon. the Minister for Revenue to the following matter of urgent public importance, namely,

"Muslims have lost properties worth about Rs. 7 lakhs in the recent communal clashes at Villupuram but the compensation sanctioned by the Government has not been paid to all the communities alike."

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : மாண்புமிகு தலைவரவர்களே, 25-7-1978 முதல் 28-7-1978 வரை விழுப்புரத்தில் நடந்த கலவரத்தில் பாதிக்கப்பட்ட ஏழை குடும்பங்களுக்கு உடனடியாக 10 கிலோ அரிசியும் 5 லிட்டர் மண்ணெண்ணெயும் கொடுக்க அரசு உத்தரவிட்டது. இது தவிர நிவாரணப் பணிகளை சரிவரக் கவனிக்க, சிறப்பாக ஒரு துணை ஆட்சியரும்

அவருக்குத் தேவையான பணியாளர்களும் அமர்த்தப்பட்டனர். முதலமைச்சர் பொது நிவாரண நிதியிலிருந்து ரூபாய் 1,86,400 வழங்கி குடிசையிழந்த 286 குடும்பங்களுக்கு ஒரு குடும்பத்துக்கு ரூபாய் 400 கொடுக்கப்பட்டது. அதே போல இக் கலவரத்தில் இறந்தவர்களின் 12 குடும்பத்தினருக்கு ரூபாய் 6,000 வீதம் கொடுக்க அரசு ஆணையிட்டது. இவ்வாறு நிவாரணத்தொகை மத பாகுபாடின்றி பாதிக்கப்பட்ட எல்லோருக்கும் கொடுக்கப்பட்டது என்பதை அரசின் சார்பில் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. கே. எஸ். அப்துல் வகாப் : கொடுக்கப்பட்ட நிவாரணத்தை அரிஜன் களுக்கு மட்டும் கொடுத்தால்தான், இந்தப் பிரச்சினையைக் கொண்டு வந்தேன் இறந்துபோன 12 பேருடைய குடும்பங்களுக்கு 6,000 ரூபாய் வீதம் கொடுத் திருப்பதை வரவேற்கிறேன், பாராட்டுகிறேன். இதற்கு முன்பு இதுமாதிரிக் கலவரங்களின்போது, இறந்து போனவர்களுடைய குடும்பங்களுக்கு இது மாதிரிக் கொடுத்தது கிடையாது. நான் முன்பு இதுபற்றிக் கேட்டபோது, அப்படிக் கொடுப்பது சம்பிரதாயமில்லை என்று சொன்னார்கள். விழுப்புரம் சம்பவத்திற்கு மட்டும் எப்படி இது சம்பிரதாயமாகக் கருதப்பட்டது? இது மாதிரிக் கொடுக்க வேண்டியதுதான். இதுமாதிரி எங்காவது நடந்தால் அரசு கொடுக்க வேண்டுமென்று கொள்கையளவில் ஏற்றுக்கொள்ளப்படுமா?

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : நிவாரணம் என்று கொடுக் கிறபோது ஜாதி, மதம், சமயம் என்று பார்க்காமல், யார் நிவாரணம் பெற தகுதியுடையவர்களோ அவர்களுக்கெல்லாம் கொடுக்கப்படுகிறது. அதைப் போல இதுவும் கொடுக்கப்பட்டது. இது தொடர்ந்து எதிர்காலத்திலும் கொடுக்கப்படுமா என்பதைப்பற்றி அரசு ஆராய்ந்து வருகிறது.

திரு. செ. முத்துசாமி: எதிர்காலத்தில் இம்மாதிரி தமிழ்நாட்டில் எங்கும் நடைபெறக் கூடாது.

(2) மேல் நிலைப் பள்ளிகள் உட்பட அனைத்துப் பள்ளி மாணவர்களுக்கும் பாட நூல்கள் கிடைக்காதது குறித்து.

மாண்புமிகு மேலவைத் தலைவர் : மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர், திருவாளர்கள் வே. தங்கப்பாண்டியன் மற்றும் ஆ. நல்லசிவம் ஆகியோர் கவன ஈர்ப்புத் தீர்மானம் கொடுத்துள்ளார்கள். ஒருவர் முன்மொழிந்தால் போதுமானது. மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய விளக்கத்திற்குப் பின், தேவைப்பட்டால், உறுப்பினர்கள் ஒவ்வொருவராக கேள்வி கேட்டு மேலும் விளக்கம் பெறலாம்.